ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2271/23 - 2022 මාර්තු මස 15 වැනි අඟහරුවාදා - 2022.03.15

*2271/23 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2016* (II)

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2022, மாச்சு 15.*

**ஒழுங்குவிதிகள்**

இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்டவாறாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 2123/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் மருந்துகள் (விலைகளின் மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகள் பின்வருமாறு இத்தாற் திருத்தப்படுகின்றன:-

(1) அதன் 1 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் மருந்துகள் (விலைகளின் மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.";

1A - G 36378 — 15 (2022/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*(2)* *அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-*

*"2. இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவையும் (இதனகத்துப்பின்னர் "அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவையும்) அதன் நிரல் IV இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட வீரியத்தைக் கொண்டவையும் அதன் நிரல் III நிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மருந்தின் தன்மையிலானவையும் அல்லது உட்கொள்வழியிலானவையுமான இனப்பெயரிலான மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலையானது, இதற்கான அட்டவணையின் நிரல் V இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.";*

*(3)* *அதன் 3 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-*

*"3. அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் அதிபட்ச சில்லறை விலையானது, அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் இனப்பெயரின் எல்லா வணிகப்பெயர்களுக்கும் ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.";*

*(4)* *அதன் 4 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-*

*"4. விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், பல்மருத்துவர், விலங்கு அறுவை மருத்துவர் ஒருவர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒன்று அல்லது ஆள் ஒருவர், அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குமேலாக அல்லது 6 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலைக்குமேலாக அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளை விற்பனை செய்தலாகாது.";*

*(5)* *அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"6. (1) இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியன்று, 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் திருத்தப்பட்டவாறான 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 2123/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் மருந்துகள் (விலைகளின் மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகளின்கீழ் மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறைவிலையொன்றில், அது, 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 2123/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் மருந்துகள் (விலைகளின் மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிக்கான அட்டவணையின் V என்னும் நிரலில் குறித்துரைக்கப்படும் அதிகபட்ச சில்லறைவிலையிலும் பார்க்க குறைவாக உள்ள விலையில் பரசிட்டமோல் தவிர்ந்த ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளை விற்கின்ற உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளரொருவர் அத்தகைய மீளாய்வுசெய்யப்பட்ட விலையை மொத்தமாகப் முப்பத்தெட்டு சதவீதத்தினால் (38%) விகிதாசாரப்படி அதிகரிக்கலாம். முப்பத்தெட்டு சதவீதத்தினால் (38%) மொத்த அதிகரிப்பு, 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அதிகரிக்கப்பட்ட ஒன்பது சதவீதத்தையும் (9%), இவ்வொழுங்குவிதிகளினால் அதிகரிக்கப்பட்ட மற்றைய இருபத்தொன்பது சதவீதத்தையும் (29%) உள்ளடக்குகின்றது:*

*(2) (அ) இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியன்று, 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய 2269/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் மருந்துகள் (500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளுக்கு / வில்லைகளுக்கு விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகளின்கீழ் மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையொன்றில், அது இதற்கான அட்டவணையின் V ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையிலும் குறைவாகவுள்ள விலையில் பரசிட்டமோலொன்றை விற்கின்ற உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் ஒருவர் அத்தகைய மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறைவிலையை இருபத்தொன்பது சதவீதத்தையும் (29%) விகிதாசாரப்படி அதிகரிக்கலாம்.*

*(ஆ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய 2269/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் மருந்துகள் (500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளுக்கு / வில்லைகளுக்கு விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகளினால் முப்பத்தைந்து சதவீத (35%) யொத்த அதிகரிப்பு 2021 ஆம் ஆண்டு ஓகத்து 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அதிகரிக்கப்பட்ட பரசிட்டமோலின் ஒன்பது சதவீத (9%) அதிகரிப்பை உள்ளடக்கியது.*

*(3) உபஒழுங்குவிதிகள் (1) மற்றும் (2) இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையின் அத்தகைய அதிகரிப்பு, இதற்கான அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விஞ்சுதலாகாது.*

*(2) விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளை உடைமையில் வைத்திருக்கின்ற வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், பல்மருத்துவர், விலங்கு அறுவைமருத்துவர் ஒவ்வொருவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் விலையை அதிகபட்ச சில்லறை விலையில் அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையில், இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையில் பேணுதல் வேண்டும்.";*

*(6) அதன் 7 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"7. அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் ஏதேனும் மருந்தின் தன்மை அல்லது வீரியம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் அத்தகைய மருந்தின் தன்மையின் அல்லது வீரியத்தின் அதிகபட்ச சில்லறை விலையானது இதற்கான அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்படாதவிடத்து, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையானது அத்தகைய மருந்தின் தன்மையில் அல்லது வீரியத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளுக்கான விலையை நிர்ணயித்தல் வேண்டும்.";*

*(7) அதன் 8 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"8. எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் வர்த்தகப் பொதியின் மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது, உற்பத்திசெய்யப்பட்ட அல்லது சந்தையில் கிடைக்கக்கூடியதான கையிருப்பில், இயன்றளவு விரைவாக, அதற்கான அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை அச்சிடுதல் அல்லது குறியிடுதல் வேண்டும்:*

*ஆயின், எவ்வாறாயினும், அதிகபட்ச சில்லறை விலை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலை, இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுமுன்னர் அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் வர்த்தகப் பொதியின்மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது அச்சிடப்படுதல் அல்லது குறியிடப்படுதல் வேண்டும்.";*

*(8) அதன் 9 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிடுவதன் மூலமும்;*

*(9) அதன் 10 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"10. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் விளங்கப்படற்பாலவராதலும் வேண்டும்.";*

*(10) அதன் 11 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"11. விற்பனை நோக்கத்துக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலர், பல்மருத்துவர், விலங்கு அறுவைமருத்துவர் ஒவ்வொருவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை வெளிக்காட்டிவைத்தல் அவரது அல்லது அதன் கடமையாதல் வேண்டும்.";*

*(11) "மருத்துவத்தொழிலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-*

*""ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்;"; அத்துடன்*

*(12)* அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

**அட்டவணை**

[*ஒழுங்குவிதி 2*]

மருந்துகளின் அதிபட்ச சில்லறை விலை

| *நிரல் I* | *நிரல் II*<br>*இனப் பெயர்* | *நிரல் III*<br>*உட்கொள்வழி/ மருந்தளவு* | *நிரல் IV*<br>*வீரியம்* | *நிரல் V*<br>*உச்சவரம்பு அதிகபட்ச விலை (இலங்கை ரூபா)* |
|---|---|---|---|---|
| 1 | அல்பென்டசோல் | மாத்திரை / கூட்டுக்குளிசை | 400 மிகி | 50.67 |
| | | | | |
| 2 | அமொக்சிசிலின் + கிலாவுலினிக் அமிலம் | வாய்மூல திரவக்கலவை | 156 மிகி /5 மிலீ | 485.59 |
| | அமொக்சிசிலின்+ கிலாவுலினிக் அமிலம் | மாத்திரை / கூட்டுக்குளிசை | 375 மிகி | 59.79 |
| | அமொக்சிசிலின் + கிலாவுலினிக் அமிலம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 625 மிகி | 101.33 |
| | அமொக்சிசிலின் + கிலாவுலினிக் அமிலம் | ஊசி மருந்து | 1.2 கி | 1065.76 |
| | | | | |
| 3 | கிலாரித்ரோமைசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 250 மிகி | 61.65 |
| | கிலாரித்ரோமைசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 500 மிகி | 124.99 |
| | கிலாரித்ரோமைசின் | வாய்மூல திரவக்கலவை | 125 மிகி /5 மிலீ | 736.40 |
| | | | | |
| 4 | அசித்ரோமைசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 250 மிகி | 63.51 |
| | அசித்ரோமைசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 500 மிகி | 89.10 |
| | அசித்ரோமைசின் | வாய்மூல திரவக்கலவை | 200 மிகி /5 மிலீ | 295.56 |
| | | | | |
| 5 | செபுரொக்சின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 250 மிகி | 76.85 |
| | செபுரொக்சின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 500 மிகி | 122.61 |
| | | | | |
| 6 | டொக்சிசைக்லின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 மிகி | 17.07 |
| | | | | |
| 7 | ஏசைக்ளோவிர் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 200 மிகி | 62.47 |
| | | | | |
| 8 | சிப்ரோபுளொக்சசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 250 மிகி | 9.71 |
| | சிப்ரோபுளொக்சசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 500 மிகி | 14.36 |
| | | | | |
| 9 | லெவோபுளொக்சசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 250 மிகி | 40.87 |
| | லெவோபுளொக்சசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 500 மிகி | 67.56 |
| | | | | |
| 10 | செபலெக்சின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 250 மிகி | 13.84 |
| | செபலெக்சின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 500 மிகி | 25.35 |
| | செபலெக்சின் | வாய்மூல திரவக்கலவை | 125 மிகி /5 மிலீ | 447.58 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II<br>இனப் பெயர் | நிரல் III<br>உட்கொள்வழி/<br>மருந்தளவு | நிரல் IV<br>வீரியம் | நிரல் V<br>உச்சவரம்பு<br>அதிகபட்ச விலை<br>(இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|
| | | | | |
| 11 | செவிக்சிம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 மிகி | 38.84 |
| | செவிக்சிம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 200 மிகி | 72.12 |
| | செவிக்சிம் | வாய்மூல திரவக்கலவை | 100 மிகி /5 மிலீ | 582.69 |
| | | | | |
| 12 | அம்லொடிபின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 5 மிகி | 25.84 |
| | அம்லொடிபின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 10 மிகி | 35.98 |
| | | | | |
| 13 | டில்ரியாசெம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 30 மிகி | 4.57 |
| | டில்ரியாசெம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 60 மிகி | 15.04 |
| | டில்ரியாசெம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 90 மிகி | 36.15 |
| | | | | |
| 14 | லொசார்ட்டன் பொட்டாசியம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 25 மிகி | 12.41 |
| | லொசார்ட்டன் பொட்டாசியம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 50 மிகி | 17.40 |
| | | | | |
| 15 | லொசார்ட்டன் +<br>ஹயட்ரோகுளோரோதயாசைட் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 62.5 மிகி | 32.84 |
| | | | | |
| 16 | எனலபிரில் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 5 மிகி | 10.13 |
| | எனலபிரில் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 10 மிகி | 17.07 |
| | | | | |
| 17 | அட்டனொலொல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 25 மிகி | 5.06 |
| | அட்டனொலொல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 50 மிகி | 7.43 |
| | அட்டனொலொல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 மிகி | 21.96 |
| | | | | |
| 18 | நிபெடிபின் - நிலைபேறான விடுவிப்பு | மாத்திரை /கூட்டுக்கு-<br>ளிசை | 20 மிகி | 6.26 |
| | | | | |
| 19 | குளோபிடொக்ரெல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 75 மிகி | 29.57 |
| | | | | |
| 20 | அட்டோர்வஸ்ட்டடின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 5 மிகி | 10.85 |
| | அட்டோர்வஸ்ட்டடின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 10 மிகி | 18.83 |
| | அட்டோர்வஸ்ட்டடின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 20 மிகி | 29.72 |
| | அட்டோர்வஸ்ட்டடின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 40 மிகி | 41.81 |
| | | | | |
| 21 | ரொசுவஸ்ட்டடின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 5 மிகி | 36.31 |
| | ரொசுவஸ்ட்டடின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 10 மிகி | 62.47 |
| | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II<br>இனப் பெயர் | நிரல் III<br>உட்கொள்வழி/<br>மருந்தளவு | நிரல் IV<br>வீரியம் | நிரல் V<br>உச்சவரம்பு<br>அதிகபட்ச விலை<br>(இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|
| 22 | ரெல்மிசார்ட்டன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 20 மிகி | 17.22 |
| | ரெல்மிசார்ட்டன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 40 மிகி | 27.36 |
| | ரெல்மிசார்ட்டன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 80 மிகி | 51.34 |
| | | | | |
| 23 | அஸ்பிரின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 75 மிகி | 5.06 |
| | அஸ்பிரின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 மிகி | 8.95 |
| | | | | |
| 24 | மெட்போர்மின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 500 மிகி | 6.67 |
| | மெட்போர்மின் - நிலைபேறான விடுவிப்பு | மாத்திரை / கூட்டுக்குளிசை | 500 மிகி | 13.00 |
| | மெட்போர்மின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 850 மிகி | 12.50 |
| | | | | |
| 25 | கிலிபென்க்லமைட் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 5 மிகி | 3.70 |
| | | | | |
| 26 | கிலிக்லசைட் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 80 மிகி | 19.09 |
| | | | | |
| 27 | தைரொக்சீன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 50 எம்சீஜீ | 10.29 |
| | தைரொக்சீன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 எம்சீஜீ | 15.38 |
| | | | | |
| 28 | கிலிபிசைட் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 5 மிகி | 13.35 |
| | | | | |
| 29 | இபியுபுரோபென் | மாத்திரை / கூட்டுக்குளிசை | 200 மிகி | 1.86 |
| | இபியுபுரோபென் | மாத்திரை / கூட்டுக்குளிசை | 400 மிகி | 6.26 |
| | | | | |
| 30 | டிக்லோபெனக் சோடியம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 50 மிகி | 21.96 |
| | டிக்லோபெனக் சோடியம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 மிகி | 25.50 |
| | | | | |
| 31 | டிக்லோபெனக் பொட்டாசியம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 50 மிகி | 18.50 |
| | | | | |
| 32 | பரசிட்டமோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 500 மிகி | 2.97 |
| | | | | |
| 33 | சோடியம் வல்புரோட் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 200 மிகி | 15.20 |
| | | | | |
| 34 | ரிஸ்பெரிடோன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 1 மிகி | 13.35 |
| | ரிஸ்பெரிடோன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 2 மிகி | 15.61 |
| | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II*<br>*இனப் பெயர்* | *நிரல் III*<br>*உட்கொள்வழி/ மருந்தளவு* | *நிரல் IV*<br>*வீரியம்* | *நிரல் V*<br>*உச்சவரம்பு அதிகபட்ச விலை (இலங்கை ரூபா)* |
|---|---|---|---|---|
| 35 | ஒலன்சபின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 5 மிகி | 16.89 |
| | ஒலன்சபின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 10 மிகி | 35.11 |
| | | | | |
| 36 | கார்பமசெபின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 200 மிகி | 20.25 |
| | | | | |
| 37 | அல்ப்ரசொலாம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 0.25 மிகி | 10.98 |
| | அல்ப்ரசொலாம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 0.5 மிகி | 16.73 |
| | | | | |
| 38 | புளொஒக்செட்டின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 20 மிகி | 18.58 |
| | | | | |
| 39 | கபாபென்டின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 மிகி | 28.29 |
| | கபாபென்டின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 300 மிகி | 55.99 |
| | | | | |
| 40 | பெக்லொமெதசோன் | டீபீ கூட்டுக்குளிசை (மூச்சினால் உள்வா-ங்குதல்) | 200 எம்சீஜீ | 10.13 |
| | பெக்லொமெதசோன் | டீபீ கூட்டுக்குளிசை (மூச்சினால் உள்வா-ங்குதல்) | 400 எம்சீஜீ | 11.48 |
| | பெக்லொமெதசோன் | மூச்சியல் கருவி (200 மருந்தளவுகள்) | 100 எம்சீஜீ | 857.17 |
| | பெக்லொமெதசோன் | மூச்சியல் கருவி (200 மருந்தளவுகள்) | 250 எம்சீஜீ | 947.52 |
| | | | | |
| 41 | சல்புயுட்டமோல் | டீபீ கூட்டுக்குளிசை (மூச்சினால் உள்வா-ங்குதல்) | 200 எம்சீஜீ | 6.75 |
| | சல்புயுட்டமோல் | டீபீ கூட்டுக்குளிசை (மூச்சினால் உள்வா-ங்குதல்) | 400 எம்சீஜீ | 9.29 |
| | சல்புயுட்டமோல் | மூச்சியல் கருவி (200 மருந்தளவுகள்) | 100 எம்சீஜீ | 523.59 |
| | | | | |
| 42 | மீதைல் பிரெட்னிசெலோன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 4 மிகி | 20.01 |
| | மீதைல் பிரெட்னிசெலோன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 16 மிகி | 69.25 |
| | | | | |
| 43 | ஒமிப்ரசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 20 மிகி | 7.60 |
| | | | | |
| 44 | பன்ட்டப்ரசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 20 மிகி | 28.70 |
| | பன்ட்டப்ரசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 40 மிகி | 47.28 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II*<br>*இனப் பெயர்* | *நிரல் III*<br>*உட்கொள்வழி/*<br>*மருந்தளவு* | *நிரல் IV*<br>*வீரியம்* | *நிரல் V*<br>*உச்சவரம்பு*<br>*அதிகபட்ச விலை*<br>*(இலங்கை ரூபா)* |
|---|---|---|---|---|
| | | | | |
| 45 | எசொமிப்ரசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 20 மிகி | 34.11 |
| | எசொமிப்ரசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 40 மிகி | 64.86 |
| | | | | |
| 46 | டொம்பெரிடோன் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 10 மிகி | 9.12 |
| | | | | |
| 47 | ரபிப்பிரசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 10 மிகி | 19.09 |
| | ரபிப்பிரசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 20 மிகி | 36.40 |
| | | | | |
| 48 | அலன்றொனிக் அமிலம் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 70 மிகி | 171.26 |
| | | | | |
| 49 | செப்டசிடிம் | ஊசி மருந்து | 500 மிகி | 772.12 |
| | செப்டசிடிம் | ஊசி மருந்து | 1 கி | 1286.87 |
| | | | | |
| 50 | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 250 மிகி | 386.06 |
| | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 500 மிகி | 723.86 |
| | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 1 கி | 1126.00 |
| | | | | |
| 51 | செபோடக்சிம் | ஊசி மருந்து | 500 மிகி | 361.94 |
| | செபோடக்சிம் | ஊசி மருந்து | 1 கி | 603.22 |
| | | | | |
| 52 | புளுகணசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 50 மிகி | 40.21 |
| | புளுகணசோல் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 150 மிகி | 72.38 |
| | | | | |
| 53 | இன்சுலின் சொலியூபல் ஹியூமன் | ஊசி மருந்து | 100 IU/1 மிலீ<br>(10 மிலீ குமிழி) | 1930.29 |
| | இன்சுலின் சொலியூபல் ஹியூமன் | ஊசி மருந்து | 100 IU/1 மிலீ<br>(3 மிலீ<br>கார்ட்ரிஜ்) | 965.15 |
| | இன்சுலின் ஐசொபேன் ஹியூமன் | ஊசி மருந்து | 100 IU/1 மிலீ<br>(10 மிலீ குமிழி) | 1930.29 |
| | இன்சுலின் ஐசொபேன் ஹியூமன் | ஊசி மருந்து | 100 IU/1 மிலீ<br>(3 மிலீ<br>கார்ட்ரிஜ்) | 965.15 |
| | பைசேசிக் ஐசோபேன் இன்சுலின்<br>(இன்சுலின் சொலியுபல் ஹியுமன்<br>30IU/1ml, இன்சுலின் ஐசோபேன்<br>ஹியுமன் 70IU/1ml) | ஊசி மருந்து | 100 IU/1 மிலீ<br>(10 மிலீ குமிழி) | 1930.29 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II*<br>*இனப் பெயர்* | *நிரல் III*<br>*உட்கொள்வழி/*<br>*மருந்தளவு* | *நிரல் IV*<br>*வீரியம்* | *நிரல் V*<br>*உச்சவரம்பு*<br>*அதிகபட்ச விலை*<br>*(இலங்கை ரூபா)* |
|---|---|---|---|---|
| | பைசேகிக் ஐசோபேன் இன்சுலின் (இன்சுலின் சொலியுபல் ஹியுமன் 30IU/1ml, இன்சுலின் ஐசோபேன் ஹியுமன் 70IU/1 ml) | ஊசி மருந்து | 100 IU/1 மிலீ (3 மிலீ கார்ட்ரிஜ்) | 965.15 |
| | | | | |
| 54 | கிலிமிபிரைட் | மாத்திரை | 1 மிகி | 11.51 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை | 2 மிகி | 16.31 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை | 3 மிகி | 27.35 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை | 4 மிகி | 29.75 |
| | | | | |
| 55 | சிடாக்லிப்டின் | மாத்திரை | 25 மிகி | 24.12 |
| | சிடாக்லிப்டின் | மாத்திரை | 50 மிகி | 45.83 |
| | சிடாக்லிப்டின் | மாத்திரை | 100 மிகி | 78.01 |
| | | | | |
| 56 | தம்சுலொசின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 0.40 மிகி | 33.77 |
| | | | | |
| 57 | மொன்டிலுகாஸ்ட் | மாத்திரை | 4 மிகி | 19.31 |
| | மொன்டிலுகாஸ்ட் | மாத்திரை | 5 மிகி | 24.12 |
| | மொன்டிலுகாஸ்ட் | மாத்திரை | 10 மிகி | 33.77 |
| | | | | |
| 58 | பிரீகபலின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 50 மிகி | 19.70 |
| | பிரீகபலின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 75 மிகி | 24.94 |
| | பிரீகபலின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 மிகி | 30.96 |
| | பிரீகபலின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 150 மிகி | 38.61 |
| | பிரீகபலின் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 300 மிகி | 63.55 |
| | | | | |
| 59 | டொபிரமேட் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 25 மிகி | 32.17 |
| | டொபிரமேட் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 50 மிகி | 51.47 |
| | டொபிரமேட் | மாத்திரை/கூட்டுக்குளிசை | 100 மிகி | 83.64 |
| | | | | |
| 60 | லமொட்ரிஜீன் | மாத்திரை | 25 மிகி | 19.31 |
| | லமொட்ரிஜீன் | மாத்திரை | 50 மிகி | 33.77 |
| | லமொட்ரிஜீன் | மாத்திரை | 100 மிகி | 56.30 |

13. 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய 2269/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் மருந்துகள் (500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளுக்கு /வில்லைகளுக்கு விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

EOG 03 - 0897

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.